# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
# கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சை – 2023(2024)

**இம்முறையும் சகல விண்ணப்பதாரிகளும் நிகழ்நிலை (online) முறைமையிலேயே பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.**

மேற்படி பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் 2024 ஜனவரி மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 2024 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு தமது விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை முறைமையில் (Online) பூரணப்படுத்த வேண்டும். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த **நகரத்தையும் பாடங்களையும்** சரியாக குறிப்பிடுவதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். மாற்றங்களை மேற்கொள்வதற்காக பின்னர் விடுக்கப்படும் வேண்டுகோள்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

## 02. விண்ணப்பப்படிவம்

2.1

- **இவ்வாண்டு தொடக்கம் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கவிருக்கும் சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளிடமும் தேசிய அடையாள அட்டை இருப்பது கட்டாயமானதாகும்.**
- **தேசிய அடையாள அட்டை இல்லாத 15 வயதிற்கும் குறைவாக உள்ள விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்காகத் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பின் அவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகைதருவது கட்டாயமானதாகும்.**

2.2 **நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதன் PDF கோவையை அச்சுப்பிரதியெடுத்து வைத்துக்கொள்வது கட்டாயம் என்பதுடன்** தேவையேற்படின் அதனை சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். **அச்சுப் பிரதியை திணைக்களத்துக்கு அனுப்பத் தேவையில்லை.**

**அரச பாடசாலை அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலையிலிருந்து விலகி விடுகைப் பத்திரத்தை (விடுகைப் பத்திரம்/கல்வி பீ 59) பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே இப் பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். பாடசாலையில் கற்றுக்கொண்டே தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தோற்றுவது கண்டறியப்படின் பரீட்சைப் பெறுபேறு இரத்துச் செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதும் தடைசெய்யப்படும்.**

2.3 2024 பெப்ரவரி 15 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னர் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாது. உரிய தினத்தில் நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னர் நிகழ்நிலை முறைமை மூடப்படும். **எக்காரணத்திற்காகவேனும் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது.**

2.4 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைத்தால் சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும்

என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்டத்திற்கமைவாக நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் உறுதிப்படுத்தப்படின் பெறுபேற்றை இரத்துச் செய்து உரிய சட்டத்திற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**03. முறைமைக்குள் பிரவேசிப்பதற்கும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்குமான தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள்**

3.1 விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- “https://doenets.lk” எனும் உத்தியோக பூர்வ இணையத்தளத்தினுள் நுழைந்து "எமது சேவை" இன் கீழுள்ள “Exam Information Centre” என்பதை (Click) செய்தோ அல்லது
- http://onlineexams.gov.lk/eic இற்குள் நுழைக.

3.2 முதலில் உங்கள் பெயர், தேசிய அடையாள அட்டை, தொலைபேசி எண் என்பவற்றை உள்ளடக்கி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

3.3 தேசிய அடையாள அட்டை எண்ணை பயன்படுத்திய பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியில் (SMS) குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டு எண்ணை (OTP) பயன்படுத்தி system இற்குள் நுழைய வேண்டும்.

3.4 அங்கு அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து மேலதிக அறிவுறுத்தல்களுக்காக "Instructions" எனும் பொத்தானை Click செய்க. தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள், பொது அறிவுறுத்தல்கள், அறிவுறுத்தல்கள் காணொளியைப் (Video) பார்ப்பதற்கு மேலதிகமாக "Next" பொத்தானை தெரிவு செய்து விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு தொடங்குக.

**04. பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் (Download) செய்தலும்**

பரீட்சைக் கட்டணத்தை தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Credit / Debit Payment) மூலமோ செலுத்த வேண்டும்.

4.1 தபால் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வீர்களாயின் “Payment method” இன் கீழுள்ள "Pay by department of post" எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்க. **அங்கு உங்களுக்கு கிடைக்கப்பெறும் Reference number ஐ தபால் அலுவலகத்தில் வழங்கி உங்களது பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை உங்களுடன் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்.**

**கொடுப்பனவு பூர்த்தியடைந்த பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியிலுள்ள (sms) இணைப்பை (link) செயற்படுத்துவதன் மூலம் உரிய வலைத்தளத்துக்குள் நுழைந்து விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் (download) செய்து கொள்ள முடியும்.**

4.2 வங்கி அட்டைகள் (credit / debit cards) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit / debit" நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 - 9 |
|---|---|---|---|---|---|---|
| கட்டணம் ரூபா | 100/- | 150/- | 200/- | 250/- | 300/- | 350/- |

05. நீங்கள் தெரிவு செய்யும் பாடங்களும் நகரமும் மிகவும் முக்கியமானது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையத்தை அமைப்பதற்கு போதுமான பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள நகரத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர்.

06. நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பப்படிவத்திலுள்ள விவரங்களும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உங்களுக்கு கிடைக்கப்பெறும் அனுமதி அட்டையிலுள்ள விபரங்களும் தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பின் அனுமதி அட்டை கிடைத்தவுடன் உடனடியாக அவ் அனுமதி அட்டையுடன் பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளைக்கு எடுத்துவரல் வேண்டும்.

07. **தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது நிரந்தர வதிவிட முகவரியை குறிப்பிட வேண்டுமென்பதுடன் தாம் கல்வி கற்கும் தனியார், சர்வதேச பாடசாலைகளின் பெயர், முகவரியை குறிப்பிட முடியாது. அவர்கள் தமது தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.**

08. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும். இது பரீட்சைக்குத் தோற்றும் எல்லாப் பாடங்களுக்கும் கட்டாயமானது.

09. இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு **விசேட தேவையுடைய** விண்ணப்பதாரிகள் இருப்பின் "Are you a special needs candidate? " இன் கீழே தகவல்களை பூர்த்தி செய்வது கட்டாயமானது.

10. விசேட கவனத்திற் கொள்ள வேண்டியவை

10.1 இப்பரீட்சைக்கென செலுத்தப்பட்ட கட்டணம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது மீளளிக்கப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கான கட்டணமாக மாற்றப்படவோ இடமளிக்கப்படமாட்டாது.

10.2 **பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த பின்னர் எக்காரணத்திற்காகவேனும் விண்ணப்பித்த பரீட்சை நிலையமோ, ஊடக மொழியோ அல்லது பாடங்களோ பின்னர் மாற்றம் செய்யப்படமாட்டாது. எனவே தங்களின் விண்ணப்பப்படிவத்தை சரியாகப் பூர்த்தி செய்ய வேண்டும்.**

10.3 இரண்டாம் பாடத்தொகுதிக்குரிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இத்தேவையைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றியிருப்பினும் பெறுபேறு வழங்கப்படமாட்டாது.

(40) சங்கீதம் (கீழைத்தேயம்)
(41) சங்கீதம் (மேலைத்தேயம்)
(42) சங்கீதம் (கர்நாடகம்)
(44) நடனம் (சுதேச)
(45) நடனம் (பரதம்)
(50) நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)
(51) நாடகமும் அரங்கியலும் (தமிழ்)
(52) நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)

மேற்படி விடயம் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 011 - 2784208 / 0112784537/ 0112785922

மின்னஞ்சல் முகவரி : gceolexamsl@gmail.com

**நிகழ்நிலை அலகு : 011 - 3661122/011 - 3671568**

தொடர் இல : 6/4/OL/2023
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
த.பெ.இல 1503, கொழும்பு.
2024.01.23

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சை ஆணையாளர் நாயகம்